## 2.24 சென்னை மாவட்டத்தைத் தவிர இதர 28 மாவட்டங்களிலும் மாவட்ட திட்ட குழுவிற்கு உதவியாக மாவட்ட திட்ட பிரிவு ஏற்படுத்துதல்

திட்டம் (ம) வளர்ச்சி (மாதி–2) துறை

அரசாணை (நிலை) எண் .141 நாள் : 18.08.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.327, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள்.14.11.1997.
2. அரசாணை (நிலை) எண்.14, ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள்.22.01.1999.
3. அரசாணை (நிலை) எண்.121, ஊரக வளர்ச்சி (இ1) துறை, நாள்.06.07.1999

**ஆணை**

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994, பிரிவு 241, உட்பிரிவு (1)இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், சென்னையைத் தவிர ஏனைய 28 மாவட்டங்களிலும் ஒரு மாவட்டத் திட்டக் குழுவை அமைத்து, பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மாவட்டத் திட்டக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை திட்டக்குழுவின் பணியாளரமைப்பு மற்றும் திட்டக்குழுவிற்கு உதவியாக மாவட்டத் திட்டப்பிரிவு அமைத்தல் மற்றும் அதற்கான பணியாளரமைப்பு பற்றிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், மாவட்டத் திட்டப்பிரிவை உருவாக்குவதற்கான ஆணைகள் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையால் வெளியிடப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்த உயர்நிலைக் குழு அளித்துள்ள பரிந்துரைகளில் அரசு ஏற்றுக்கொண்ட பரிந்துரைகளில் ஒன்றான எண்.567 கீழே கண்டவாறு கூறுகிறது:

567. ''ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஐந்தாண்டுக்கான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அத்திட்டம், மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு மாநில ஐந்தாண்டு திட்டமாக தயாரிக்கப்படுவதை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். மேலும் மாநில ஆண்டு திட்டத்தை தயாரிப்பது ஒவ்வொரு திட்டக் குழுவின் முதன்மையாக பணியாகும். தமிழ்நாடு அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட திட்டக் குழுக்களை கூடிய விரைவில் அமைக்கும். மாவட்டத் திட்டக்குழுவிற்கு உதவும் வகையில் விரைவில் மாவட்ட திட்டமிடும் பிரிவை அரசு ஏற்படுத்தும். மாநில திட்டக் குழுவானது, மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதற்கான வழிமுறைகளை வகுக்கும். ''

3. மாவட்டத் திட்டங்களை வரையவும், மாவட்ட அளவில் துறைகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும், திட்டங்களைச் செயல்படுத்தவும், மாவட்டத் திட்டப் பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்றும், அதற்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு மத்திய அரசின் உதவி வழங்கப்படும் என்றும் மத்தியத் திட்டக்குழு குறிப்பிட்டிருந்ததின் அடிப்படையில், மாநில அரசு இதற்கென திட்டத்தை வகுத்து மத்திய அரசின் உதவியைக் கோரியிருந்தது. ஆனால் மத்தியத் திட்டக்குழு 1999–2000 ஆம் ஆண்டு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் திட்டமிடுதலை வலுப்படுத்த மத்திய அரசின் திட்ட உதவி வழங்குவதற்கில்லை என்று தெரிவித்துவிட்டது. இந்த சூழ்நிலையில், மேலே பத்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையை அரசு தீவிரமாக ஆய்வு செய்து, மாநில அரசே மாவட்டத் திட்டப் பிரிவிற்கான செலவினங்களை ஏற்று மாவட்டத் திட்டக்குழுவிற்கு உதவியாக சென்னையைத் தவிர இதர 28 மாவட்டங்களிலும் மாவட்டந்தோறும் ஒரு மாவட்டத் திட்டப்பிரிவை ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்துள்ளது.

4. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்த உயர்நிலைக் குழுவின், பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையின் அடிப்படையில், அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது:

(4.1) சென்னை மாவட்டத்தைத் தவிர இணைப்பு 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள 28 மாவட்டங்களிலும் மாவட்டத் திட்டக்குழுவிற்கு உதவியாக ஒரு மாவட்டத் திட்டப் பிரிவு தோற்றுவிக்கப்படுகிறது. இம் மாவட்டத் திட்டப்பிரிவுகள் மாநிலத் திட்டக்குழுவின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலும் இயங்கும்.

(4.2) மாவட்டந்தோறும் மாவட்டத் திட்டப்பிரிவின் பணியாளரமைப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்:

| வ. எண் | பதவியில் பெயர் | சம்பள விகிதம் | பணியிடங்கள் |
|---|---|---|---|
| 1. | மாவட்டத் திட்ட அலுவலர் | ரூ.8000–275–13500 | 1 |
| 2. | தொழில்நுட்ப உதவியாளர் | ரூ.5500–175–9000 | 1 |
| 3. | உதவியாளர் | ரூ.4000–100–6000 | 1 |
| 4. | அலுவலக உதவியாளர் | ரூ.2550–55–3200 | 1 |

(4.3) மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உயர்நிலைக் குழுவின் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரை எண்.18–ன்படி, அரசு ஆணை (நிலை) எண்.121, ஊரக வளர்ச்சித் (இ1) துறை, நாள்.06.07.1999–ல் குறிப்பிட்டவாறு உதவி இயக்குநர் நிலையில் மாவட்டப் பஞ்சாயத்துக்களில் பணியமர்த்தப்பட்டுள்ள செயலர்களே பதவி வழியில் மாவட்டத் திட்ட அலுவலர்களாகவும் செயல்பட அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களது சம்பளம் மற்றும் இதர படிகள் மாவட்டப் பஞ்சாயத்துகளின் நிதியிலிருந்து வழங்கப்படும்.

(4.4) இணைப்பு 2–இல் குறிப்பிட்டவாறு ரூ.4000–100–6000 என்ற சம்பள விகிதத்தில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் அங்காடிப் புலனாய்வுத் திட்டத்தின்கீழ் நிரந்தரமாக உள்ள 28 உதவிப் புள்ளியியல் ஆய்வாளர் பணியிடங்களை ரூ.5500–175–9000 என்ற சம்பள விகிதத்தில் புள்ளியியல் ஆய்வாளர்களாக உயர்த்தப்பட்டு அப்பணியிடங்கள் மாவட்டத் திட்டப்பிரிவில் அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு தொழில்நுட்ப உதவியாளராகப் பணியமர்த்தப்படுகிறார்கள்.

(4.5) இணைப்பு 2–இல் தெரிவித்துள்ளவாறு, ஈரோடு மாவட்டத்தில் மிகையாக உள்ள இரண்டு உதவியாளர் பணியிடங்களும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மிகையாக உள்ள ஐந்து உதவியாளர் பணியிடங்களும் மாற்றுப் பணி அடிப்படையில் மாவட்டத் திட்டப் பிரிவிற்கு உதவியாளர்களாக மாற்றப்படுகிறார்கள். மேலும், ரூ.4000–100–6000 என்ற சம்பள விகிதத்தில் 21 உதவியாளர் பணியிடங்கள் அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின்றன.

(4.6) ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்தந்த மாவட்டப் பணியமைப்புகளிலிருந்து ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்தை மாற்றுப் பணியில் நியமனம் செய்து மாவட்ட திட்டப்பிரிவிற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(4.7) மாவட்டத் திட்டப் பிரிவிற்கு மாவட்டத் திட்ட அலுவலர்களைத் தவிர ஏனைய பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதரப்படிகள், மற்றும் இதர செலவினங்கள் மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள வேண்டும்.

(4.8) தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை இயக்குநரிடமிருந்து பட்டியல் பெற்று மாநிலத் திட்டக்குழு நியமன ஆணைகளை வெளியிடும். உதவியாளர் பணியிடங்களை வருவாய் நிர்வாக அமைப்பிலிருந்து பட்டியல் பெற்று, மாநிலத் திட்டக்குழு நியமன ஆணைகளை வெளியிடும்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.2341/நிசெ(து).99, நாள்.28.06.1999 மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் அ.சா.எண்.32136/சி4/99–1, நாள்.16.08.1999–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஆர்.சந்தானம்**
அரசு செயலாளர்

## இணைப்பு – 1

### மாவட்டத் திட்டப்பிரிவு அமைக்கப்படும் மாவட்டங்கள்

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. வேலூர்
4. கடலூர்
5. விழுப்புரம்
6. சேலம்
7. ஈரோடு
8. கோயம்புத்தூர்
9. திண்டுக்கல்
10. மதுரை
11. திருச்சிராப்பள்ளி
12. கரூர்
13. பெரம்பலூர்
14. திருநெல்வேலி
15. இராமநாதபுரம்
16. விருதுநகர்
17. தூத்துக்குடி
18. கன்னியாகுமரி
19. தர்மபுரி
20. நாகப்பட்டினம்
21. சிவகங்கை
22. தஞ்சாவூர்
23. நீலகிரி
24. புதுக்கோட்டை
25. தேனி
26. திருவாரூர்
27. நாமக்கல்
28. திருவண்ணாமலை

## இணைப்பு – 2

மாவட்டத் திட்டப் பிரிவிற்கு பணியாளர்களை பிறதுறைகளிலிருந்து மாற்றுப்பணியில் நியமித்தலின் விவரம் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை அங்காடி புலனாய்வுத் திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட நிரந்தரமான உதவிப் புள்ளியியல் ஆய்வாளர் பணியிடங்கள் (சம்பளம் ரூ.4000–100–6000)

| வ. எண் | மையங்கள் | பதவி தோற்றுவிக்கப்பட்ட அரசாணை |
|---|---|---|
| 1 | கும்பகோணம் | அரசாணை நிலை எண். 3372, உணவு மற்றும் வேளாண்மைத் துறை, நாள்.4.11.1957 |
| 2 | சிதம்பரம் | |
| 3 | மேட்டுப்பாளையம் | |
| 4 | கள்ளக்குறிச்சி | அரசாணை நிலை எண்.1060, உணவு மற்றும் வேளாண்மைத் துறை, நாள்.18.3.1960 (குறிப்பாணை எண்.15704/ஏ3/59–9, நாள்.18.03.1960.) |
| 5 | குடியாத்தம் | |
| 6 | தாராபுரம் | |
| 7 | கொரடச்சேரி | |
| 8 | சங்கரன்கோவில் | |
| 9 | கோவில்பட்டி | |
| 10 | பாபநாசம் | |
| 11 | லால்குடி | |
| 12 | இராசிபுரம் | |
| 13 | கோபிச்செட்டிபாளையம் | அரசாணை நிலை எண்.2823, உணவு மற்றும் வேளாண்மைத் துறை, நாள்.2.8.1961. |
| 14 | திருப்பத்தூர் | |
| 15 | போளூர் | |
| 16 | திருக்கோயிலூர் | |
| 17 | ஓசூர் | |
| 18 | நன்னிலம் | |
| 19 | வாலாஜா (வாணியம்பாடி) | |
| 20 | சோழவந்தான் (மேலூர்) | |
| 21 | உடுமலைப்பேட்டை | அரசாணை நிலை எண்.1237, உணவு மற்றும் வேளாண்மைத் துறை, நாள்.15.3.1984. |
| 22 | காங்கேயம் | |
| 23 | பவானி | |
| 24 | ஆலங்குடி | |
| 25 | கருங்கல் | |
| 26 | இராஜபாளையம் | |
| 27 | கூடலூர் | |
| 28 | மதுராந்தகம் | |

### ஈரோடு மாவட்டப் பணியமைப்பு

ரூ.4000–100–6000 என்ற சம்பள விகிதத்தில் அரசு ஆணை நிலை எண்.883/87, நாள் 26.07.1987ல் தோற்றுவிக்கப்பட்ட நிரந்தரமாக உள்ள 2 உதவியாளர்கள் பணியிடங்கள்

### திருச்சிராப்பள்ளி மாவட்டப் பணியமைப்பு

ரூ.4000–100–8000 என்ற சம்பள விகிதத்தில் அரசு ஆணை நிலை எண்.1326, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 25.05.1974ல் தோற்றுவிக்கப்பட்டு அரசு ஆணை எண்.180, ஊரக வளர்ச்சி (இ5) துறை, நாள்.09.06.1997ல் தொடர்ந்து இயங்கிவரும் ஐந்து உதவியாளர் பணியிடங்கள்

**ஆர். சந்தானம்,**
அரசு செயலாளர்